12. பள்ளியின் சிறப்பு ஊர் / பிற துறை வழியாகப் பெற்ற நற்பெயர்கள் :

- தாமிரபணியின் ஆற்றங்கரையில் இயற்கையான சூழலில் அமையப்பெற்ற இப்பள்ளி வழியாக பெண்களுக்கு தரமான கல்வி கொடுக்கப்பட்டு வருகிறது.

- இப்பள்ளியில் பயின்ற பல கிறிஸ்தவ கத்தோலிக்க இளம் உள்ளங்களை துறவு வாழ்விற்கு தூண்டிய பள்ளி.

- பெண்கள் பாதுகாப்பான முறையில் தங்கி சிறந்த கல்வியை, குறைந்த செலவில் பெற விடுதியும், கருணை இல்லமும் கொண்ட பள்ளி.

- Lions Club, Rotary Club, விக்கிரமசிங்கபுர பல்சமய இயக்கம், மனித உரிமைக் கழகம் போன்றோரின் பாராட்டுதலையும், நற்பெயரையும் பெற்றக் பள்ளி.

- இரண்டு முறை மாநில அளவில் Rank எடுத்த பள்ளி.

- சாதி, சமய வேறுபாடின்றி அனைத்து குழந்தைகளுக்கும் ஒழுக்கத்தோடு கல்வியை வழங்கும் பள்ளி.

13. பார்வையாளர், பள்ளிக்கு வருகை தந்த பெரியோர்கள் வழங்கிய பாராட்டுச் செய்திகள் / ஆண்டு விழா அறிக்கை : இணைக்கப்பட்டுள்ளது.

14. பள்ளியின் தனிச் சிறப்புச் செயல்பாடுகள் / Extra curricular activities in special way

பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றம், English Literary Association, கணிதம் மன்றம், அறிவியல் மன்றம், வரலாறு மற்றும் தொண்மைப் பாதுகாப்பு மன்றம், வணிகவியல் மன்றம், நுண்கலை மன்றம், மறைக்கல்வி மன்றம், சதுரங்க விளையாட்டு மன்றம், கலைக் குழு மன்றம் ஆகியவை பல்வேறு ஆசிரியைகளின் பொறுப்பில் மாணவிகளின் வளர்ச்சியைக் கண்முன் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மன்றங்கள் செயல்படும் நாட்கள் 2-ம் மற்றும் 4-ம் வியாழக்கிழமை மாலை (3.45-4.30) P.M

15. நிறுவன வளர்ச்சிக்காக தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் கலந்து கொண்ட சிறப்பு கருத்தரங்குகள்

தலைமை ஆசிரியர் :

- Workshop on Minority Educational law in Tamilnadu

Place : Trichy, Date: 12.01.2008

- One day Seminar conducted by i Discoveri Centre for Education and Enterprise.

Place: Madurai, October 2008.

- Inter Religious Dialogue Seminars

Place: Madurai, Yr. 2003-2004.

- Computer Training Programme.

Place: Annai Velankanni College of Engineering, K.K. District.

Date: 29.10.2009-31.10.2009

Seminar on Right to Information Act – 2005

Place: Madurai, Date: 24.04.2010

Leadership Skill Development Programme for Headmasters

Place: Cape Institute of Technology, Nellai District

Date : (29.06.2010- 01.07.2010), 27.07.2012

One day Workshop on "Effective Administrator & Efficient Mentor".

Place: Einstein College of Engineering, Alangulam.

Date : 31.03.2012

ஆசிரியர்கள்:

- *1998-1999* ல் NCC திருமதி. முத்துராணி சென்னையில் நடைபெற்ற Selection Training ல் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வந்தார்கள்.

- *2000*-ல் திருமதி. முத்துராணி மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற NCC Refresher Training - in kwalier இதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வந்தார்.

- *2001*-ல் கேரளாவில் நடைபெற்ற NCC Refresher Training -ல் கலந்து கொண்டார்கள்.

– 2002, 2003 –ல் பாண்டிச்சேரியில் நடைபெற்ற NIC (National Integration Camp) - லும, 2004–ல் பீகாரில் நடைபெற்ற NIC லும், 2005–ல் ஆக்ராவில் நடைபெற்ற NIC லும திருமதி. முத்துராணி ஆசிரியை கலந்து கொண்டார்கள்.

– 6,7,8.02.2009– ஆகிய மூன்று நாட்கள் சாராள் தக்கர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற தலைமைப் பண்புகள் பயிற்சி முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஆசிரியை திருமதி. மரிய இனிகோ கலந்து கொண்டு சான்றிதழ் பெற்று வந்தார்.

– 09.09.2008 அன்று அம்பாசமுத்திரம் தீர்த்தபதி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பேரிடர் மேலாண்டை விழிப்புணர்வு கருத்தரங்கில் ஆசிரியை திருமதி.மரிய இனிகோ கலந்து கொண்டார்.

– 2010–2011–ல் திருமதி. மரிய இனிகோ ஆசிரியை கோயம்புத்தூர் ஜீவஜோதி ஆசிரமத்தில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான சர்வதேச மதிப்பீட்டுத் திட்டம் (Programme for international Student Evaluation) சார்ந்த பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று அதற்கான தேர்விற்காக மாணவர்களை தாயாரித்ததுடன் 26.10.2010 அன்று தேர்வும் நடத்தப்பட்டது.

– 16.11.2011 மற்றும் 17.11.2011–ல் திருநெல்வேலி சாப்டர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிதி மற்றும் பயிற்சிக் கல்வியில் திருமதி. லில்லி கிரேஸ் மேரி ஆசிரியை கலந்து கொண்டார்.

16. (25,50,60,75) ஆண்டு விழா மலர்களைக் கொண்டு வருக

17. நமது இல்லம் உள்ள பங்கிலிருந்து நமது சபைக்கு அழைப்புப் பெற்றவர் எண்ணிக்கை, பிற சபையில் சேர்ந்தவர்கள் (பொதுவாக) : அமலி பள்ளியில் பயின்ற பல கத்தோலிக்க மாணவிகள் நம் சபைக்கும் மற்ற சபைகளுக்கும் சென்று சிறந்த இறைப் பணியாற்றி வருகின்றனர்.

18. அமலவை மற்றும் மறைமாவட்ட உறவு சவால்கள்

அமலவை ஆன்மீக நிலையிலும், கல்வி நிலையிலும் மேன்மேலும் வளர்ச்சியுற மறைமாவட்டத்தோடு நல்இணக்கத்தை ஏற்படுத்தி வலுவுற்றது.

1901–ஆம் ஆண்டிலே சேசு சபை குருக்கள் ஓர் கோட்டை போன்று உறுதியான கட்டிடம் எழுப்பினர். பின் மனுக்குலத்துக்கு தம் இரத்தத்தை வடித்த திரு இருதயத்திற்கு ஓர் தேவாலயமும் கட்டினர். அதைச் சுற்றியுள்ள பகுதியும் இணைந்து தோன்றியது "இருதயகுளம்".

கொள்ளையும், கொலையும் கூத்தாடிய நாளிலே திருமறைக்குரு கவுசானல் அடிகள் நம்பதியிலே சந்நியாச சபை ஒன்றை ஸ்தாபித்து அப்பக்தர்களின் அறிவுச்

சோலையைத் தூண்ட திண்ணைப் பள்ளி போன்று தோற்றுவித்தார். அதுதான் ‘அமலி பள்ளி’யின் ஆணிவேர்.

1902 முதல் 1922–ம் ஆண்டு வரை சகோதரர்கள் தற்போது லூர்து சுகாலயம் இருக்கும் தலத்திலே பள்ளியைத் திறம்பட நடத்தி இளம் பிஞ்சுகளுக்கு ஞானத்தையும் நல்லொழுக்கத்தையும் ஊட்டி வளர்த்தனர். பள்ளி விரிவாக்கத்திற்கு இடம் போதாமையால் புதிதாய் போடப்பட்ட அம்பை, பாபநாசம் ரஸ்தாவுக்கு அருகே ஓர் நிலம் வாங்கி தற்போது அமலவை கன்னியர் வசிக்கும் கட்டிடத்தைக் கட்டி ஓர் உயர்தரப் பள்ளியாக அங்கு நடத்தினர். 1943–ஆம் ஆண்டிலே சங்.கெல்லர்சாமி சிரேஸ்டராக இருந்த பொழுது அமலவை கன்னியர் இகபர சேவைக்காக இருதயகுளத்திற்கு வந்து சேர்ந்தனர். பெண்பாலர்களுக்கென்று தனிப்பள்ளி நடத்துவது நல்லதென்று நினைத்து சகோதரர்கள் நடத்தி வந்த பள்ளி கன்னியர்களின் கண்காணிப்புக்குள் வரவே தியாகி மனம் படைத்த சகோதரர்கள் மேற்கே ‘குன்றின் மேல் ஒரு பள்ளி கட்டிக் கொண்டனர். எனவே 1944 முதல் 1950 வரை கன்னியர் தாம் பெற்ற பள்ளியை பேணிப் பாதுகாத்து வளர்த்து உயர்த்தினர்.

அதுமட்டுமின்றி அமலி பள்ளியின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் வளர்ச்சியிலும் குருக்கள் உறுதுணையாக செயல்பட்டார்கள்.

1947–ஆம் ஆண்டு சுததந்திர வருடம் கனம் தாயார் குளோட்டில்டா மேரி அவர்களின் அரிய ஆசையின் பேரில் உயர்நிலைக்கல்வி ஒன்று நடத்த உறுதுணையாக நின்றவர் திருமறைக்குரு ஸ்வாமி இருதய இஞ்ஞாசியார் சே.சு அவர்கள்.

1950–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் இருதயகுளம் பங்குக் குருவாக பொறுப்பேற்ற மறைதிரு இக்னேஷியஸ் இருதயம் சே.ச. அடிகளின் எண்ணக் கோட்டையின் ஒரு அம்சம் தான் ‘அமலி உயர் நிலைப்பள்ளி’. இவர் பள்ளிக்கு துணையாகவும், தூணாகவும் செயல்பட்டார்கள். பள்ளியின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு பள்ளியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இவரைத் தொடர்ந்து வந்த பங்குத்தந்தையர்கள் மற்றும் திரு இருதய அருட்சகோதரர்கள் பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு இன்று வரை நல்லுறவுடன் உள்ளனர்.

## 19. நிறுவனம் சந்தித்த சவால்கள்

1954 செப்டம்பர் 22–ல் பள்ளி தணிக்கையாளர் திருமதி. செல்லம்மாள் அவர்கள் சேவியர் பள்ளியைப் பார்வையிட வந்த போது பள்ளியின் மேலாளரைச் சந்தித்து ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இருதயகுளம் பள்ளி ஏற்ற இடம் என்றும் மேலாளர் விண்ணப்பித்தால் தான் ஆனமட்டும் அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி தர உதவி

செய்வதாகவும் வாக்களித்தார்கள். அதன்படி 1954 செப்டம்பர் திங்கள் முதல் அனுமதி கோரப்பட்டதன் படி பள்ளிகள் திறந்தன. ஆனால் அனுமதி வந்தபாடில்லை. ஜூலை மாதம் 2-ம் வாரத்தில் நம் மாநில முதலமைச்சர் உயர்திரு. காமராஜ் அவர்கள் குற்றாலம் வந்திருந்த பொழுது மேலாளர் அவரைப் பேட்டி கண்டு உயர்நிலைப் பள்ளிக்கு அடிக்கல் நாட்ட அவரை அழைத்தார். பலத்த எதிர்ப்புகள் இருந்த போதிலும் 1955 ஜூலை முதல்நாள் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஜூலை 2-ம் நாள் கல்வி அதிகாரியிடமிருந்தும் 4-ம் நாள் டைரக்டரிடமிருந்தும் உத்தரவு வந்தது. 1955-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ம் நாள் உயர்நிலைப் பள்ளி முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

இதே தருணத்தில் தான் பள்ளிக்கான நிலங்கள் வாங்கும் பிரச்சினையும் நடைபெற்றது. பல ஆண்டுகளாக பேரம் பேசி கடைசியில் 3 ஏக்கர் 40 செண்ட் மேற்பட்ட ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.

24.09.92-ல் சிறு பான்மையினர் நடத்தும் கல்லூரிகள் பள்ளிகள் நிறுவனங்களுக்குக் கொடுத்துள்ள உரிமைகள் அவசர சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டதால் அவ்வுரிமைகளைத் திரும்பப் பெறக் கோரி தமிழ்நாடு அளவில் சிறுபான்மையினர் திருச்சியில் நடத்திய பேரணியில் தலைமை ஆசிரியர் உட்பட பல ஆசிரியர் பெருமக்களும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

முயற்சியில்லா வாழ்வு இருண்ட வாழ்வு. தம்மால் இவ்வளவுதான் முடியும் என்றிராமல் வாழ்வின் குறுக்கே வந்த தடைக்கற்களை எல்லாம் உடைத்தெறிந்து அதையே தாம் அடையப்போகும் வெற்றிக்குப் படிக்கட்டாக அமைத்துக் கொள்பவனே உலகப் புகழ் பெறுவான் என்பதற்கேற்ப பல இன்னல்களைச் சந்தித்து வெற்றி கண்டது அமலி பள்ளி.

அமலி பள்ளியானது இந்து முன்னனியைச் சார்ந்தவர்களால் பல இடையூறுகளைச் 2006-2007 முதல் சந்தித்தது.

பள்ளியில் தற்காலிகமாகப் பணிபுரிந்து கொண்டிருந்த ஆசிரியை செல்வி.சுகுணா இறந்ததற்கு பள்ளிதான் காரணம் என்று கூறி பிரச்சனை ஏற்படுத்தினர். அது வதந்தி என்பதால் அந்த பிரச்சனை விரைவில் முடிக்கப்பட்டது.

பள்ளி வளாகத்திற்குள் Canteen வைக்க அனுமதி கிடைக்காததால் சினம் அடைந்த திரு.இருதயராஜ், திரு. பால் மாரியப்பனுடன் இணைந்து பள்ளிக்கு தொடர்ந்து தொல்லைகள் பல கொடுத்தனர். பல்வேறு நபர்கள் வழியாக பணம் கொடுத்தால் பிரச்சனையை முடித்துக் கொள்வோம் என்று பேரம் பேசினர். இதற்கெல்லாம் இணங்கா நிலையைக் கண்ட அவர்கள் தொடர்ந்து தொல்லைக் கொடுத்தனர்.

2007 வளனார் கருணை இல்ல மாணவி பள்ளி மாடியிலிருந்து கீழே விழுந்ததை தவறான பல பொய்க் காரணங்கள் கூறி பெற்றோரைத் தூண்டிவிட்டு பல இடையூறுகளை ஏற்படுத்தினார்கள். பொய்யான வதந்திகளை செய்தித்தாள்கள், துண்டுப் பிரச்சாரம், சுவரொட்டிகள் மூலமும் பரப்பினர். இப்பிரச்சனைக்கும் பலரின் ஆதரவோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மேலும் பள்ளி வளாகத்திற்குள் வண்டிப் பாதை இருப்பதாக பெரிது படுத்தி கட்டப்பட்ட கட்டிடங்களை இடிக்க வழக்கு தொடர்ந்து போராட்டங்கள் நடத்தினர். மாணவிகளுக்கு கொடுக்கபடும் நற்கல்வியை இனம் கண்டு கொண்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் ஆதரவோடு இப்பிரச்சனை முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது.

20. சபையில், மறைமாவட்டத்தில் முறையே தொடங்கி, பணி செய்து மூடப்பட்ட இல்லம் / நிறுவனம் / விடுதி / மறைமாவட்டப் பணிகள் :

இல்லை

21. இல்லம், பள்ளி இடம் மாற்றப்பட்டிருந்தால் விபரம் :

மாற்றப்படவில்லை

22. எல்லா தகவல்களும் தேதியுடன் குறிப்பிடப்பட வேண்டும் :

முடிந்தவரை எல்லா தகவல்களும் தேதியுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

23. நம் வீடுகளில் நம் முன்னோர் பயன்படுத்திய வைத்திருந்த பொருட்கள் ஏதேனும் இருந்தால் கொண்டு வர வேண்டும்

24. சபை நிறுவனத்தின் தாக்கம் நமது பணி, இருப்பின் நோக்கம்

– சாதி, சமய வேறுபாடின்றி எம் பள்ளியை நாடிவரும் அனைத்து மாணவிகளுக்கும இடம் கொடுத்து ஒழுக்கம், உயர்கல்வியில் அவர்கள் மேலோங்கும் பொருட்டு நிறுவனம் தொடங்கப்பட்டது.

– 'ஞானமும், நெறியும் அறிய' என்ற விருதுவாக்குடன் பிறர் நலம் பேணும் பண்பு வளரவும், கடவுளுக்கும், தேசத்திற்கும் தொண்டாற்றவும் தேவையான ஞான, அறிவு வளங்களை மாணவிகளுக்குக் கொடுப்பதே நிறுவனத்தின் நோக்கமாக உள்ளது.

– காலை, மாலை, நடுப்பகல் வேளையில் ஆசிரியரது மேற்பார்வையில் கல்வி பெறுவதும், பின் தங்கிய மாணவிகளுக்குத் தனிக்கவனம் செலுத்தியும் ஊக்குவிப்பதே இப்பள்ளியின் சிறந்த செயல்பாடாக உள்ளது.

– ஏட்டுப்படிப்போடு நின்றுவிடாமல் மாணவிகளுக்கு பேச்சு, நடிப்பு, இசை, எழுத்து போன்றவற்றிலும் திறமையளிக்க கல்வி மன்றம் துணை செய்கிறது.

– மாதம் ஒரு முறை தமிழ், ஆங்கிலம், சமூகம், அறிவியல் முதலிய பல துறைகளிலும் இலக்கிய மன்றம் நடத்தி மாணவிகளுக்கு பொறுப்புணர்ச்சி, தானே செயலாற்றும் திறன், குழு உணர்ச்சி போன்றவற்றில் பயிற்சியளிப்பதும் முக்கியக் கருத்தாகக் கொண்டு செயல்படுகிறது.

– உள வளர்ச்சிக்கு உடற்பயிற்சியும் தேவை என்பதை முக்கியப்படுத்தி, காலை, மாலை நேரங்களில் தகுந்த பயிற்சிகள் கொடுத்து, கலைகளும் கற்றுக் கொடுத்து, பல இயக்கங்கள் மூலம் நாட்டுப்பற்றையும் வளர்த்து மாணவிகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுகிறது.

– சேவை, ஊழியம், தொண்டு, பொதுநலம் அனைத்திற்கும் அடிப்படையாக, உயிர்நாடியாக இருப்பது அன்பு, அன்புடையவர் செய்யும் பணியே அன்பர் பணி என்பதை மனதில் கொண்டு அன்புப் பணி ஆற்றவதே இப்பள்ளியின் தலையாயக் கடமையாக இருக்கிறது.

– துணிவில் பணிவும், எண்ணத்தில் உயர்வும், ஒழுக்கமும், தூய்மை, வாய்மை, கடும் உழைப்பு மற்றவர்களை மதித்தல், தூய அன்பு, இழிகுணமின்மை, ஆணவமின்மை இதனையே வாழ்வுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைத்து வாழும் நோக்கத்தையே மாணவிகளில் விதைக்கிறது இப்பள்ளி.

– குழந்தைகளின் உள்ளக் கவர்ச்சியிலே அக்கறை, அவர்களுக்கு அறிவூட்டும் முயற்சியிலே கனிவு, முன்னேற்றத்திலே பங்கு. துணை நிற்பதில் ஆர்வம், அவர்களது மனதைப் புரிந்து வழிநடத்துவதில் அக்கறைகாட்டி வாழ்வின் தரத்தை உயர்த்துவதே பள்ளியின் நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

பணியின் தாக்கம் :

- அமலி மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைந்திருக்கும் இடத்தைச் சுற்றிலும் கிராமங்களே உள்ளன. இக்கிராமங்களில் பெரும்பாலும் படிக்காத, அன்றாடம் கூலி வேலை, பீடி சுற்றுதல் போன்ற வேலை செய்பவர்களே உள்ளனர். இவர்களின் பெண் குழந்தைகள் இப்பள்ளியில் கற்று வாழ்வில் உயர்ந்துள்ளனர்.
- குறிப்பாக ஏழை மாணவிகள், பெற்றோரை இழந்த யாருமில்லாத, கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் கருணை இல்லத்தில் சேர்க்கப்பட்டு, பள்ளியில் பயின்று மேன்மையும் பலனும் அடைந்துள்ளனர். பலன் பெற்றும் வருகின்றனர்.

கல்வி கற்று வெளியேறிய மாணவிகள் இன்று சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர்.

| எண். | பெயர் | தற்போதைய கல்வித்தகுதி | இப்பள்ளியில் படித்த ஆண்டு மற்றும் வகுப்பு | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | ARUL MARY @ AGNES XAVIER | M.B.B.S. | 1962-63 S.S.L.C | SUPERIOR GENERAL |
| 2 | P.SURIA KANI | M.A., M.Ed., M.Phil. | S.S.L.C | Rtd. D.E.O |
| 3 | C.PREMA | B.Sc., M.Ed., | 1970-1971 S.S.L.C | B.T.ASST |
| 4 | XAVIER JEYA THANGAM | M.Sc., M.Ed., | 1972-73 S.S.L.C | P.G. ASST |
| 5 | SHIYAMALA | M.L. | 1973-74 S.S.L.C | JUDGE |
| 6 | N. LALITHA | M.Com., M.Phil. | 1973-74 S.S.L.C | PROFESSOR |
| 7 | S. MUTHURANI | M.A.M.Ed., | 1974-1975 S.S.L.C | B.T. ASST |
| 8 | PUSPHA RANJITHAM | M.Com., B.Ed., PhD. | 1976-77 S.S.L.C | HEADMISTRESS |
|  | SR. MARGRET | M.A., M.A., B.Ed., | 1976-77 S.S.L.C | HEADMISTRESS in A.P. |
| 9 | LILLY GRACE MARY | M.Com., M.Ed., M.Phil., | 1978-1979S.S.LC | P.G.ASST |
| 10 | M. SHANTHI | B.Sc., B.Ed., D.E.C.E., | 1981-1982 XII Std | COMP. ASST. |
| 11 | DR.JEYANTHI KAMALA | M.B.B.S | 1981-82 XII Std | DOCTOR |
| 12 | R.USHA | SIDDHA MEDICINE | 1981-1982 S.S.L.C | SIDDHA DOCTOR |
| 13 | MALAR VIZHI | M.A., B.L. | 1981-82 XII Std | JUDGE |
| 14 | ANNU LAKSHMI | M.B.B.S. | 1981-82 XII Std | DOCTOR |
| 15 | D.LATHA DAISY | M.Sc., B.Ed., | 1981-1982 XII Std | B.T. ASST. |
| 16 | M. SELVI | M.B.B.S., MS. | 1983-84 XII Std | DOCTOR |
| 17 | S.AGNES LILLY THRESE | M.Sc., M.Ed., | 1983-1984 XII Std | P.G.ASST. |
| 18 | S. SELVI | M.B.B.S. | 1983-84 XII Std | DOCTOR |
| 19 | PUSHPA LATHA | M.B.B.S | 1985- 86 XII Std | DOCTOR |
| 20 | PONMANI THANGAM | M.E. | 1985- 86 XII Std | ENGINEER |
| 21 | KANNAKA | B.E. | 1985- 86 XII Std | ENGINEER |
| 22 | VEL MANNIKKA VALLI | M.V.S. | 1987- 88XII Std | VETINARY DOCTOR |

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | A. UMA SUBBULAKSHMI | M.E. | 1987- 88 XII Std | PROFESSOR |
| 24 | MUTHU KUMARI | B.A., B.L. | 1986- 87 XII Std | LAWYER |
| 25 | C. LILLY JEYA RUPAVATHY | M.Sc., B.Ed., | 1986-1987 XII Std | SSA, INSPECTOR |
| 26 | M. SUMATHI | B.A., B.L. | 1987- 88 XII Std | LAWYER |
| 27 | N.NARMATHA | M.B.B.S. | 1987-1988 XII Std | DOCTOR |
| 28 | A. VELMANIKAVALLI | B.V.S. | 1988- 89 XII Std | VETINARY DOCTOR |
| 29 | G.MARY JEGATHIS | B.Sc., B.Ed., | 1988-1989 XII Std | B.T.ASST. |
| 30 | M.JEYA | M.Sc., B.Ed., | 1989-1990 XII Std | B.T.ASST |
| 31 | Sr. MARCEL CAROLINE | M.A., M.Ed., | 1989-1990 XII Std | P.G.ASST. |
| 32 | JESMINE | M.B.B.S. (M.D) | 1998- 99 XII Std | DOCTOR |
| 33 | G. JEYA JOTHI | M.Sc., PhD. | 1990- 91 XII Std | PROFESSOR |
| 34 | C. ANNU RATHA | M.E. | 1991- 92 XII Std | ENGINEER |
| | A.G.SELVARANI | NURSING | 1992-93 – XII Std | STAFF NURSE |
| 35 | S. JEYANTHI | M.E. | 1994- 95 XII Std | PROFESSOR |
| 36 | A. ANTO THERESE MARY | B.E., M.Tech. | 1995- 96 XII Std | PROFESSOR |
| 37 | SUMITHA | B.E. | 1995-1996 XII Std | ENGINEER |
| 38 | S.VARALAKSHMI | M.A., B.Ed., M.Phil., | 1996-1997 XII Std. | LECTURER |
| 39 | SUBBULAKSHMI | B.E. | 1998-1999 XII Std | ENGINEER |
| 40 | D.SARAL RUPAVATHY | B.L. | 1998-1999 XII Std | LECTURER |
| 41 | S.AMALA ARUL SHARMILA | M.Sc., Ph.D | 1999-2000 XII Std | LECTURER |
| 42 | SUBBURATHINAM | T.T.C | 1999-2000 XII Std | TEACHER |
| 43 | SELVA JESSY | B.P.T. | 2000- 2001 XII Std | PHYSIOTHERAPIST |
| 44 | EVANJILIN JEBA | M.B.B.S., (M.D) | 2001- 2002 XII Std | DOCTOR |
| 45 | D. SILVIA | B.P.T. | 2002- 2003 XII Std | DOCTOR |
| 46 | P.RAJASANKARI | M.Sc., | 2002-2003 XII Std | SORTING ASST (RAILWAY) |
| 47 | USHA | M.Sc., | 2002-2003 XII Std | SORTING ASST (RAILWAY) |
| 48 | MARIA FRANCISCA | B.E. | 2002- 2003 XII Std | S.I. |
| 49 | M.SUBAGNANA JOTHI | B.Sc., | 2003-2004 XII Std | SORTING ASST (RAILWAY) |
| 50 | GEETHA | B.Sc., | 2003-2004 XII Std | SORTING ASST(RAILWAY) |

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | MUTHU LAKSHMI | B.E. | 2005- 2006 XII Std | ENGINEER |
| 52 | PAPPY | M.B.B.S., | | DOCTOR |
| 53 | JEYA LAKSHMI | M.B.B.S., | | DOCTOR |
| 54 | LINGA GOMATHI | AGRI | | AGRI |
| 55 | GANAGAMANI | SIDDHA MEDICINE | | SIDDHA DOCTOR |
| 56 | MAGESHWARI | SIDDHA MEDICINE | | SIDDHA DOCTOR |
| 57 | AMUTHA | SIDDHA MEDICINE | | SIDDHA DOCTOR |
| 58 | RAJATHI | B.E. | | ENGINEER |
| 59 | K. SELVI | M.B.B.S., | | DOCTOR |
| 60 | SEETHA LAKSHMI | B.E. | | ENGINEER |
| 61 | RAJESWARI | M.B.B.S., | | DOCTOR |

25. முடிந்த அளவுக்கு புகைப்படங்கள் கொண்டு வருக – முடிந்த அளவுக்கு புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளது.